

நேற்று (08.11.2025) அமைச்சர் மா.சுப்பிரமணியன், கோடம்பாக்கம் மண்டலம், அசோக் நகரில் உள்ள டாக்டர் கலைஞர் கருணாநிதி நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளி மாணவனின் கோரிக்கையினை உடனடியாக நிறைவேற்றிடும் வகையில் சக்கர நாற்காலியினை வழங்கினார். இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, எச்.ஆர்.கௌஷிக், மருத்துவர் சுகந்தி ராஜகுமாரி, டாக்டர் கோ. சாந்தகுமாரி, எம்.கிருஷ்ணமூர்த்தி, யாழினி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





லக்காபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் சுமார் 2 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 வகுப்பறைகள் அமைக்க தொடக்கப் பணிகளும் நடைபெற்றது. துவக்க விழாவில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் பணியினை துவக்கி வைத்தார்கள். விழாவில் பொதுமக்கள் ஒன்றிய கழகச் செயலாளர் கதிர்வேல், கல்வித்துறை அதிகாரிகள் ஆசிரியப் பெருமக்கள் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டார்கள்.

டாக்டர் ஜெய.ராஜமூர்த்தி வாழ்த்துரை! கர்நாடக தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ நூல் அறிமுக விழா!

## பெங்களூருவில் இன்று நடைபெறுகிறது!

பெங்களூரு, நவ.9-

கர்நாடக மாநில திமுக இலக்கிய அணி சார்பில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ என்ற நூல் அறிமுக விழா பெங்களூருவில் இன்று (நவம்பர் 9ம் தேதி )காலை 10 மணிக்கு குயின்ஸ் ரோட்டில் உள்ள இந்திய வேளாண்மை கழகம் அரங்கத்தில் நடைபெறுகிறது.

கர்நாடக மாநில தமிழ் பத்திரிக்கையாளர்கள் சங்கத் தலைவர் முத்துமணி நன்னன் வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி தலைவர் போர் முரசு கதிரவன் தலைமை தாங்குகிறார்.

கர்நாடக மாநில தி.மு.க. நிர்வாகிகள் இலக்கிய அணி இளைஞரணி, மகளிர் அணி, தொ.மு.ச. நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர் டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி நூல் அறிமுகம் செய்து வாழ்த்துரை வழங்குகிறார்.

தலைமை இலக்கிய அணி பொருளாளர் நாகை சந்திரபாபு பாரதி. ஆர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விழா மேடையில் சிறப்பு நூலை பெறுபவர்கள் மதுசூதன் பாபு (லிட்டில் பிளவர் பள்ளி, செங்கம்) வ.முருகன் தொழிலதிபர் (வி ஸ்கொயர் வணிக வளாகம்,) ஹரி கிருஷ்ணன் கேளஸ் ஆர்டிசி, கார்த்திக், இலக்கியா (தாளாளர் சிகரம் மெட்ரிகுலேஷன் செங்கம்,) கிரி, திருப்பத்தூர் எஸ்.ராஜேந்திரன் எஸ். பிரான்சிஸ் ஷமீன் சுலைமான் ஆகியோர் நூல்களை பெற்றுக் கொள்கின்றனர்.

தங்க தங்கவயல் கரிகாலன் நன்றி கூறுகிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 262 வது நாள்!

## கொளத்தூர் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

*சென்னை, நவ.8-*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் திட்டத்தின் 262 வது நாள் கொளத்தூர் மேற்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி உணவு வழங்கப் பட்டது.*



*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 262 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (08.11.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 65, அரிதாஸ் பிரதான சாலை, கொளத்தூர். 2) வட்டம் 65 அ, சிவசக்தி நகர், 2வது மெயின்ரோடு, கொளத்தூர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ். தனசேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என். பொன்முடி, கே. ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச் செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

தாம்பரம் மாநகரம் – பீர்க்கன்காரணை 59–வது வட்டக் கழகச் செயலாளர்

# கே.வெங்கடேசன் - வெ.வைதேகி இல்லத் திருமண விழா!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வாழ்த்து!

*சென்னை, நவ. 9-*

*கழகத் தலைவர் முதல்வர் மு க ஸ்டாலின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல் வாழ்த்துக்களுடன் தாம்பரம் மாநகராட்சி பீர்க்கன்காரணை 59ஆவது வட்டக் கழக செயலாளர் கே.வெங்கடேசன் முன்னாள் மாமன்ற உறுப்பினர் வெ. வைதேகி இணையரின் மூத்த மகள் வெ.யுவபாரதி புதுப்பெருங்களத்தூர் வெங்கடேஸ்வரா தெருவில் வசிக்கும் ந. தனசேகரன் த.பரமேஸ்வரி இணையரின் புதல்வர் த.மோகன் பிரசாத் ஆகியோரின் திருமண விழா நாளை (10.11.2025 திங்கட்கிழமை) காலை 5.30 மணி அளவில் பழைய பெருங்களத்தூரில் உள்ள லட்சுமி நாராயன் மஹாலில் நடைபெறுகிறது.*



*இவ்விழாவிற்கு பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் எஸ் சேகர் எம் சி தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர் எஸ் ஷங்கர் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.*

*59 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி சங்கர் வரவேற்புரை ஆற்றுகிறார்.*

*ஆர். மஞ்சுநாதன், ஜே.குப்புசாமி, வி.யோபுகாந்த், எஸ்.கோபாலகிருஷ்ணன், டி.குமரேசன் ஆர். பால்பாண்டியன், பி.கார்த்திக் ராஜா, ஏ.கோவர்தனன், ஏ.கணபதி, ஜி. மோகன் ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மணவிழாவில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*மேலும் இவ்விழாவில் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், டி.காமராஜ் எம்.சி., படப்பை ஆ.மனோகரன், ஆர்.சுந்தரமூர்த்தி, த.ஜெயக்குமார், மு.ஆதிமாறன்,*

*எஸ்.இந்திரன், பி.புகழேந்தி எம்.சி., இரா. சுரேஷ், அ.நடராஜன் எம்.சி., க.தேவேந்திரன், கோல்ட் டி.பிரகாஷ், பொன்.சதாசிவம், மு.வேல்முருகன், அ.விநாயகமூர்த்தி, எல்.லோகநாதன், எம்.கே.டி.கார்த்திக், வி.விஜயகுமார், வ.க.ரவிச்சந்திரன், ஜி.வேலுமணி, ச.ராஜேஷ், இ.விக்கி, எஸ்.ஜி.கருணாகரன், மங்களபுரம் எம்.பாபு, இரா.தாமோதரன், வி. கார்த்திக், பா.குறிஞ்சி சிவா, எஸ்.மலைராஜன், இரா.தேவராஜ், எஸ். மோகன்ராஜ், புருஷோத்தமன், இ.சேது மாதவன், ஆர்.பரஞ்சோதி, பி.நந்தகுமார்,*

*டி.ஆர்.கோபி.எம்.சி., திருமதி கமலா சேகர் எம்.சி., திருமதி மதுமிதாமதன் எம்.சி., திருமதி ஹேமாவதி சேகர் எம்.சி., செ.சுரேஷ் எம்.சி., தருமதி சசிகலா கார்த்திக் எம்.சி., திருமதி மல்லிகா சிவபிரகாசம், எஸ்.ராமதாஸ் தமயந்தி, கே.ரவி, கே.சாமுண்டீஸ்வரி, டி.வரலட்சுமி, சுகந்தி சேகர், டி.தயாளன், இ.எம். சாம்சன், ஜி.கோதண்டன், கோமதி அப்பாசாமி, பொற்செல்வி ஆறுமுகம், ராஜசுலோக்சனா, 59-ஆவது வட்ட அவைத் தலைவர் எஸ்.கோபாலகிருஷ்ணன், வட்டப் பொருளாளர் (பொறுப்பு) ரயில் ராஜா, வட்டப் பிரதிநிதி டி. தட்சிணாமூர்த்தி, தாம்பரம் மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கார்த்திக் ராஜா, பகுதி சிறுபான்மையினர் அணி எ.என்.அப்துல் ரகுமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*முன்னாள் எம்.சி. கே.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.*

**வரவேற்பு விழா**

*முன்னதாக இன்று (9.11.2025 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.30 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 7.00 மணிக்கு அலெக்ஸ் இன் அலைகள் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

# சென்னை வடகிழக்கு மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (09.11.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில், மாதவரம், வி.ஆர்.டி. நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., எனது முன்னிலையில் நடைபெறவுள்ளது.

மேலும் இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாதவரம் தொகுதிப் பார்வையாளர் ஜெ.அருண் மற்றும் திருவொற்றியூர் தொகுதிப் பார்வையாளர் டாக்டர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அணைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 11.11.2025 தேதி நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (S.I.R), கழக ஆக்கப் பணிகள்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

ஆதிதிராவிடர் – பழங்குடியின நலத்துறை சார்பில்

# இதழியல் - ஊடகவியல் துறையில் ஒரு வார உண்டு உறைவிடப் பயிற்சி பட்டறை!

## சென்னையில் நவ. 10 முதல் 18 வரை நடைபெறுகிறது!

*சென்னை, நவ. 9 -*

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறையின் சார்பில் சென்னை இதழியல் கல்வி நிறுவனம் சமூகநீதி மற்றும் சமத்துவ மையம், சென்னை சமூகப் பணி கல்லூரி ஆகியோருடன் இணைந்து இதழியல் மற்றும் ஊடகவியல் துறையில் “ஒரு வார உண்டு உறைவிடப் பயிற்சி பட்டறை” கோட்டூர்புரத்தில் உள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் நவம்பர் 10 முதல் 18 வரையில் 9 நாட்கள் நடைபெறுகிறது!*

*பயிற்சியை நிறைவு செய்யும் 26 பங்கேற்பாளர்களில் 15 பங்கேற்பாளர்களுக்கு முன்னணி ஊடக நிறுவனங்களில் இரண்டு மாதங்கள் ரூ.20,000/- ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சி வழங்கப்பட உள்ளது!*

*தமிழ்நாடு அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, பட்டியலின மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்முறை திறன் மற்றும் சமூகத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிமுகம் செய்து செயல்படுத்திவருகிறது. அதன் தொடர்ச்சியாக, தற்போது தமிழ்நாடு அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, சென்னை இதழியல் கல்வி நிறுவனம், மற்றும் சமூகநீதி மற்றும் சமத்துவ மையம், சென்னை சமூகப்பணி கல்லூரி ஆகியோருடன் இணைந்து“இதழியல் மற்றும் ஊடகவியல் துறையில் ”ஒரு வார உண்டு உறைவிடப் பயிற்சி பட்டறையை கோட்டூர்புரத்தில் உள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் நவம்பர் 10 முதல் 18 வரையில் 9 நாட்கள் நடத்துகிறது.*

*இப்பயிற்சியில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 26 இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களை பெற்ற பட்டியலின மற்றும் பட்டியல் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் பங்கேற்று பயிற்சி பெற இருக்கிறார்கள்.*

*இந்த சிறப்பு திட்டமானது, சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கு குரல் கொடுக்க ஊடகத்தை ஒரு சமூக மாற்ற கருவியாகப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பட்டியலின மற்றும் பட்டியல் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஊடக உலகில் திறமையு டன் நுழைய தேவையான எழுத்து, காட்சி, ஒலி மற்றும் டிஜிட்டல் ஊடகத் திறன்கள் பயிற்சியாக வழங்கப்பட உள்ளன.*

**முக்கிய அம்சங்கள்:**

*பங்கேற்பாளர்களுக்கு சென்னை இதழியல் கல்வி நிறுவனமானது நேரடி சிறப்பு பயிற்சி வகுப்புகளை தமிழ்நாட்டில் அனுபவமுள்ள மூத்த பத்திரிகையாளர்கள், நிருபர்கள், எழுத்தாளர்கள், இதழியலாளர்கள், தரவு இதழியல் நிபுணர்கள் ஆகியோரைக் கொண்டு நடத்துகிறது.*

*அச்சு ஊடகம், தொலைக்காட்சி, வானொலி, இணைய ஊடகங்களில் செய்தி உருவாக்கும் நடைமுறை பயிற்சிகள் மற்றும் செய்முறை வகுப்புகள் பங்கேற்பா ளர்களுக்கு வழங்கப்படுகிறது.*

*குறிப்பாக வீடியோ எடிட்டிங், பாட்காஸ்டிங், செய்தி தொகுப்பு, தரவு இதழியல் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவை பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படுகிறது.*

*பயிற்சியை நிறைவு செய்யும் 26 பங்கேற்பாளர்களில் இருந்து 15 பங்கேற்பாளர்களுக்கு முன்னணி ஊடக நிறுவனங்களில் இரண்டு மாதங்கள் ரூ.20,000/- ஊக்கத்தொகையுடன் கூடிய பயிற்சி வழங்கப்பட உள்ளது.*

*இந்த பயிற்சியானது பட்டியலின மற்றும் பட்டியல் பழங்குடியினர் சமூகத்தினரின் குரலை பதிவுசெய்யும் பிரதிநிதிகளாக இளைஞர்கள் ஊடகத் துறையில் பணிபுரியும் வாய்ப்பையும், சமூக நீதி, சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் பாகுபாடின்றி வாழும் சம உரிமை போன்ற கோட்பாடுகளைச் சமூகத்தில் வளர்த்தெடுக்கக் கூடிய சமூக பொறுப்புடன் கூடிய இதழியலாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.*



தாம்பரம் மாநகராட்சி, 58வது வார்டில் மழைநீர் வடிகால்வாய் பணிக்காக 57,லட்சம் ரூபாய் செலவில் எம்.கே.பி.நகர்,வேலு தெரு,ஆபிரகாம் தெரு,குறிஞ்சி தெரு,முருகேசன் தெரு,அன்பு தெரு,அறிவு தெரு,முதல் தெரு,கண்ணன் தெரு ஆகிய தெருகளுக்கு வடிகால் அமைக்கும் பணியை 4,வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் பணியை துவக்கி வைத்தார் உடன் மாமன்ற உறுப்பினர் மதுமிதா மதன் மாநகர நிர்வாகிகள்,வட்ட நிர்வாகிகள் மற்றும் நல சங்க நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றனர்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் SRI வாக்காளர் பட்டியல் பாக மேற்பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம் தச்சூரில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப்பணியின் போது பாகம் வாரியாக செயல்படும் பாகமுகவர்களுக்கு வழக்கறிஞர் அணி மற்றும் தகவல்தொழில்நுட்ப அணி நிர்வாகிகளை பொறுப்பாளர்களாக நியமித்து அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் அலோசனைகள் வழங்கினார். உடன் தொகுதி பார்வையாளர் கவி கணேஷ், நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மு.கதிரவன், பா.செ.குணசேகரன், வெங்கடாசலபதி, கி.ஆனந்த் குமார், எஸ். கோபி, ஜெ.ரமேஷ் உள்பட பலர் உள்ளனர்